ஆக்கம்: ஆசிரியை T.பேபி ஷாலினி
கே/ சாந்த மரியாள் தமிழ் மகா வித்தியாலயம்

# கானல் வரி



### இளங்கோவடிகள்

- இவர் சங்கமருவிய காலத்து புலவர்.
- சேரலாதன் - தந்தை.
- செங்குட்டுவன் - சகோதரன். (அண்ணன்)
- அரச குலத்தைச் சார்ந்த இவர், சமண சமயத்தை தழுவி பின் துறவறம் பூண்டார்.
- சிலப்பதிகாரம் எனும் பெரும் காப்பியத்தை உருவாக்கியவர்.

### சிலப்பதிகாரம்

- சங்கமருவிய காலத்து அற இலக்கியம்.
- ஐம்பெரும் காப்பியங்களில் முதலில் தோன்றியது.
- முத் தமிழ் காப்பியம் என்று அழைக்கப்படும்.
- மூன்று காண்டங்களையும் 30 காதைகளையும் கொண்டது.
  - புகார் காண்டம் - 10 காதைகள்
  - மதுரைக் காண்டம் - 13 காதைகள்
  - வஞ்சிக் காண்டம் - 7 காதைகள்

### கானல் வரிப் பாடல்களை பாட நேர்ந்த சந்தர்ப்பம்

கண்ணகியை விட்டு மாதவியுடன் வாழ்ந்து வரும் கோவலன், மாதவியுடன் இந்திர விழா காணச் சென்ற இடத்தில் மாதவியின் வேண்டுகோளினை கேட்டு காவிரியை விளித்து பாடுகிறான் கோவலன். அதற்கு எதிர்பாட்டு மாதவி பாடுகிறாள். அதை கேட்ட கோவலன் மனம் மாறுகிறது. மாதவியை விட்டுப் பிரிந்து செல்லும் நிலையை கூறும் பாடல்கள் கானல் வரிப் பாடல்கள் ஆகும்.

## காவிரியை நோக்கி கோவலன் பாடியவை

**பாடல் 01**

சந்தி பிரிப்பு :

**திங்கள் மாலை வெண் குடையான்**
**சென்னி செங்கோல் அது ஓச்சி**
**கங்கை தன்னைப் புணர்ந்தாலும்**
**புலவாய் வாழி காவேரி**
**கங்கை தன்னைப் புணர்த்தாலும்**
**புலவாது ஒழிதல் கயல் கண்ணாவாய்**
**மங்கை மாதர் பெரும் கற்பென்று**
**அறிந்தேன் வாழி காவேரி**

**பொருள் :**

மாலை அனிந்த முழு மதியைப் போல வெண்கொற்ற குடையை உடைய சோழன், அவன் தன் செங்கோலை நிலை நிறுத்தி கங்கையை கூடினாலும் நீ அவனை வெறுப்பதில்லை. அதனால் நீ வாழ்வாயாக! கங்கையை அவன் கூடினாலும் நீ வெறுப்பதற்கு காரணம், கயல் மீன் போன்ற அழகிய கண்களை உடைய மங்கையே! பெண்களின் நிலைபெற்ற கற்பின் தன்மையே! என்பதனை நான் அறிந்து கொண்டேன். வாழி காவேரி!

**பாடல் 02**

சந்தி பிரிப்பு :

**மண்ணு மாலை வெண் குடையான்**
**வலையா செங்கோல் அது ஓச்சி**
**கன்னி தன்னை புணர்ந்தாலும்**
**புலவாய் வாழி காவேரி**
**கன்னி தன்னை புணர்ந்தாலும்**
**புலவாது ஒழிதல் கயல் கண்ணாய்**
**மண்ணு மாதர் பெரும் கற்பென்று**
**அறிந்தேன் வாழி காவேரி**

**பொருள்:**

நிலைபெற்ற புகழ்மாலை சூடிய, வெண்கொற்றக் குடையை உடையவன் சோழன். அவன் என்றும் வளையாத தன் செங்கோலைச் செலுத்தி குமரியைக் கூடினாலும் நீ அவனை வெறுக்காமல் இருக்கிறாய் அதனால் நீ வாழ்வாயாக காவேரி! கன்னியாகிய குமரியை அவன் கூடினாலும் நீ அவனை வெறுக்காமல் இருப்பது, கயல் கண்ணாய் பெண்களின் நிலை பெற்ற கற்பிற்கு தன்மையே என்பதை நான் அறிந்து கொண்டேன், வாழி காவேரி!

**பாடல் 03**

சந்தி பிரிப்பு :

**உழவர் ஓதை மதகு ஓதை**
**உடைநீர் ஓதை தண் பதம் கொள்**
**விழவர் ஓதை சிறந்து ஆர்ப்ப**
**நடத்தாய் வாழி காவேரி**
**விழவர் ஓதை சிறந்து ஆர்ப்ப**
**நடந்த எல்லாம் வாய் காவா**
**மழவர் ஓதை வளவன் தன்**
**வலனே வாழி காவேரி.**

**பொருள்:**

புதுப்புனல் பெருகி வந்தது கண்டு, உழவர் மகிழ்ச்சியால் ஆர்ப் பறிக்கும் ஓசையும், நீர் மதகிலே சொல்லுவதால் உண்டாகும் ஓசையும் கரைகளையும் வரப்புகளையும் உடைத்துப் பாய்கின்ற நீரின் ஓசையும், இரு புறமும் சிந்து ஒலிக்க, நீ நடந்து செல்பவள்! ஆதலின் நீ வாழ்வாயாக! காவேரி! அவ்வாறு நீ நடந்த செயலெல்லாம் அறனிடத்தை காவல் செய்யவும் வேண்டாமைக்குக் காரணமான வீரனின் போர் ஒழுக்கத்தையுடைய சோழ வேந்தனின் ஆட்சிச் சிறப்பேயாகும், என்பதனை நான் அறிந்தேன், நீயும் அறிவாயாக! வாழி காவேரி!

## காவிரியை நோக்கி மாதவி பாடியவை

**பாடல் 04**

சந்தி பிரிப்பு :

**மருங்கு வண்டு சிறந்து ஆர்ப்ப மணிப்பூ ஆடை அது போர்த்துக்**
**கருங்கயல் விழித்து ஒல்கி நடந்தாய் வாழி காவேரி**
**கருங்கயல் கண் விழித்து ஒல்கி நடந்த எல்லாம் நின் கணவன்**
**திருந்து செங்கோல் வளையாமை அறிந்தேன் வாழி காவேரி**

பொருள் :

இரண்டு பக்கமும் வண்டுகள் மிகுதியாக ஒலிக்க, அழகிய பூவாடை போர்த்து கரிய கயல் போலும் கண் விழித்து அசைந்து நடக்கிறாய்! காவேரி நீ வாழ்வாயாக! கரிய கயல்களைப் போலும் கண்களை விழித்து அவ்வாறு நளினமாக அசைந்து நடக்கும் செயலுக்கெள்ளாம் கரணம், உன் கணவனான சோழ மன்னனின் திருத்தமான செங்கோல் வளையாமையே என்பதை அறிந்தேன். காவேரி நீ வாழ்வாயாக!

**பாடல் 05**

சந்தி பிரிப்பு :

**பூவார் சோலை மயில் ஆட பிரிந்து குயில்கள் இசை பாட**
**காமர் மாலை அருகசைய நடந்தாய் வாழி காவேரி**
**காமர் மாலை அருகசையை நடந்த எல்லாம் நின் கணவன்**
**நாம வேலின் திறன் கண்டே அறிந்தேன் வாழி காவேரி**

பொருள் :

பூக்கள் நிறைந்த சோலையிலே மயில்கள் மகிழ்வுடன் ஆட, குயில்கள் விரும்பி இசைபாட, விருப்பம் பொருத்திய மலைகள் அருகே அசைய நடந்தாய்! காவேரி நீ வாழ்வாயாக! இவ் விதமான விருப்பம் பொருந்திய மலைகள் அருகே அசைய நீ நடந்தமைக்கெல்லாம் காரணம் உன்னுடைய கணவனாக சோழ வேந்தனது பகைவர்களுக்கு அச்சம் தருகின்ற வேலினுடைய ஆற்றலை நீ கண்டதாலேயேதான் என்பதை நான் அறிந்து கொண்டேன் காவேரி நீ வாழ்வாயாக!

**பாடல் 06**

சந்தி பிரிப்பு :

**வாழி அவன் தன் வளநாடு மகவு ஆய் வளர்க்கும் தாய் ஆகி**
**ஊழி உய்க்கும் பேர் உதவி ஒழியாய் வாழி காவேரி**
**ஊழி உய்க்கும் பேர் உதவி ஒழியாது ஒழுகல் உயிர் ஓம்பும்**
**ஆழி ஆள்வான் பகல் வெய்யோன் அருளே வாழி காவேரி**

பொருள் :

உன் கணவனான சோழனின் வளநாடு குழந்தையாகவும், நீ அதனை வளர்க்கும் தாயாகி ஊழிக்காலம் வரை நடத்தி வருகின்ற பேருதவியை ஒரு போதும் நிறுத்தியதில்லை. காவேரி நீ வாழ்வாயாக! நீ அவ்வாறு காத்து வருவதற்கு காரணம், உயிர்களைப் பாதுகாக்கும் ஆணைச் சக்கரத்தை செலுத்தும் பகலைத் தரும் சூரிய குலத்தவனான சோழ மன்னனின் நடுவு நிலைமை தவறாத தன்மையே அன்றோ? காவேரி நீ வாழ்வாயாக!

## கானல் வரிப் பாடல்களில் இடம்பெறும் அணிகள்

- ***கயற் கண்ணாய் - உவமை அணி***
  *கயல் மீன் போன்ற அழகிய கண்களை உடைய.*
- ***கருங்கயற்கண் - உவமை***
  *கரிய கயல் போன்ற கண் விழித்து.*
- ***புகழ் மாலை - உருவகம்***
  *புகழ் அழகிய மாலை*

- ***'வளநாடு மகவாய் வளர்க்கும் தாயாகி' - உருவகம்***
  *சோழனின் வளநாடு தாயாகவும், அதனை வளர்க்கும் தாயக காவேரியும் உருவகிக்கப்படுத்தல்.*

- ***பாடல்களில் காவேரியை ஒரு பெண்ணாக உருவகித்துப் பாடப்பட்டுள்ளது.***

- ***எதுகை, மோனை தொடைகளில் பாடல்வரிகள் அமைந்திருத்தல்.***

பாடல் அடிகளில் காணப்படும் இலக்கியச் சிறப்புகள் சில....

- **"மண்ணு மாலை வெண்குடையான் வளையாச் செங்கோல்"**
  சோழ மன்னனின் தோற்றப்பொழிவும் ஆட்சிச் சிறப்பும் எடுத்துக் கூறப்படுகிறது. நிலையான புகழை உடையவனும், சிறந்த ஆட்சிக்கு சின்னமான வெண்கொற்றக் குடையை உடையவனும், நீதி தவறாத செங்கோலாட்சி கொண்டவனும் என்பதனுடாக சோழ மன்னனின் ஆட்சி சிறப்பு கூறப்படுகின்றது.

- **"மருங்கு வண்டு சிறந்தர்ப்ப மனிப்பூவாடை அது போர்த்து"**

காவேரி ஆற்றின் அழகும் செழிப்பும் சிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆற்றின் இரு பக்கமும் வண்டுகள் அதிகமாக ஒலிக்க, பூக்கள் நிரம்பிய ஆடைகளைப் போர்த்து நதி நகர்ந்து செல்கின்றது ஏன்பதனுடாக சிறப்பு கூறப்பட்டுள்ளது.

- **"வழியவன் தன் வளநாடு மாவாய் வளர்க்கும் தாயாகி ஊழி உய்க்கும் பேருதவி ஒழியாய்"**

காவேரி ஆற்றின் சிறப்பு, தன் கணவனான சோழ வள நாட்டை குழந்தையாகவும், தான் அதை வளர்க்கும் தாயாகவும் உருவகித்து, ஊழிக் காலம் வரை காவேரியானது பேருதவி புரிந்து வருவதும், காவேரி தனது பணியை நிறுத்தாமல் செய்வதும் இங்கு சிறப்பித்து கூறப்படுகிறது.

- **வாய் காவா மழவர் ஓதை வளவன் தன் வளனே**
  சோழனின் ஆட்சி சிறப்பு, அரணிடத்தைக் காவல் செய்யவும் வேண்டாமைக்குக் காரணமான வீர மறவர்களின் போர் ஒழுக்கத்தையுடைய சோழ வேந்தனின் ஆட்சி சிறப்பும் கூறப்பட்டுள்ளது.

- **"கருங்கயற் கண் விழித்து ஒல்கி நடந்த வெல்லாம் நின் கணவன் திருந்து செங்கோல் வளையாமை"**
  காவேரி ஆற்றின் அழகுச் சிறப்பும் சோழ மன்னனின் ஆட்சிச் சிறப்பும் சிறப்பிக்கப்படுகிறது. கருங்கயல் மீன் போன்ற கண்களை விழித்து (உவமை) நளினமாக நடந்து செல்வது காவேரியின் அழகினை சிறப்பிக்கின்றது. முறை தவறாக செங்கோலாட்சி என்பதனுடாக சோழ மன்னனின் ஆட்சி சிறப்பிக்கப்படுகின்றது.

- **"உயிரோம்பும் ஆழியாள்வான் பகல் வெய்யோன் அருளே"**
  சோழ மன்னனின் ஆட்சி சிறப்பு, நடுநிலை பிறழாத் தன்மை, உயிர்களை பாதுகாக்கும் ஆனைச் சக்கரத்தை உடையவன், நடு நிலை பிறழாத தருமத்தை உடையவன் என்ற சிறப்புக்கள் வெளிப்படுத்தப்படுகின்றது.

## எதிர் பார்க்கை வினாக்கள்

1. சோழ மன்னனின் பெருமைகள் வெளிப்படுமாற்றை எடுத்து காட்டுக.
2. காவேரி நதியின் வளம் விபரிக்கப்படுமாற்றை விளக்குக.
3. சோழ மன்னனின் நிலைபேறுடைய ஆட்சிக்கு காரணமென்று இளங்கோவடிகள் எதனைக் குறிப்பிடுகின்றார்?
4. காவிரியை நோக்கி கோவலன் பாடும் வரிகளில் தொனிக்கும் உட்பொருளை குறிப்பிடுக.
5. காவிரியை நோக்கி மாதவி பாடும் வரிகளில் தொனிக்கும் உட்பொருளை குறிப்பிடுக.